அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடித இல:01/2002

எனது இல: தா/111/5/13
அரசாங்க நிர்வாக,முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
2002.02.25

அமைச்சு செயலாளர்கள்,
மாகாண சபை பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

**அரசு வாகனங்களுக்கு தொடர்புடைய நிறுவனத்தின் பெயரை உபயோகித்தல்**

அரசு வாகனங்களில் அரச இலச்சினை பொறித்தல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 1992.08.19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க மற்றும் 1994.08.03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின்பால் தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

அரச வாகனங்களில் அரச இலச்சினைகளை உபயோகித்தல் தொடர்பாக மேற்படி சுற்றுநிருபங்களில் அறிவுரைகள் வழங்கி இருந்த போதிலும் அந்த அறிவுரைகளை உரியவாறு கடைபிடிக்கப்படாத சந்தரப்பங்கள் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் தற்போது வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருப அறிவுரைக் கேற்ப அரசு வாகனங்களில் அரசு இலச்சினையை பொறியிடுவதற்கு மேலதிகமாக அமைச்சின் /திணைக்களத்தின்/நிறுனத்தின் பெயரையும் குறிப்பிடுவதற்கு செயற்படுமாறு தங்கள் கீழ் இருக்கும் சகல தாபன தலைவர்களுக்கும் அறிவுரை வழங்கவும்

ஒப்பம் : எஸ்.ரணுக்கே
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு

pm/Vechi-t/7